**இரத்தினபுரி மாநகர சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 03 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 10 ஆந் திகதி நகர பிதாவிற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் பெறவேண்டிய ஆதனக் கடன் வட்டி வருமானம் மற்றும் சம்பள மீளளிப்பான முறையே ரூபா 98,504 தொகையும் ரூபா 11,601,634 தொகையும் ஆண்டிற்கான வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிராததுடன் கடந்த ஆண்டின் திசெம்பர் மாதத்திற்காக மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்ற

வருமானமாக முறையே ரூபா 86,838 வும், ரூபா 1,814,628 வும் இவ் ஆண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டின் திசெம்பர் மாதத்திற்கு உரித்தாக மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட ரூபா 116,000 தொகையான இணைந்த படிப்பண மீளளிப்பு வருமானம், மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது குடுகல்வத்த கடை வாடகை மற்றும் கடைத் தொகுதி வாடகை பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 534,235 தொகையான போதிலும் இது ரூபா 562,410 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் 02 செலவினத் தலைப்புகளுக்கு உரித்தான பட்டியலிடப்பட்ட வருமானம் ஆண்டிற்கான வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் ரூபா 454,541 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) திட்டக் குழுக் கணக்கின் வருமானம் கணக்கீடு செய்யப்படுகையில் அத்துமீறிய சேவைக் கட்டண வருமானப் பெறுவனவுகள் ரூபா 100,000 முன் தயாரிப்புக் கட்டண வருமானப் பெறுவனவாக அறவீட்டுத் தலைப்பு மாற்றப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) முன்னைய ஆண்டிற்காகக் கிடைத்த முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 13,537,102 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் ஏப்ரல் முதல் திசெம்பர் வரை பெறவேண்டியிருந்த முத்திரைக் கட்டண வருமானம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் இறுதிக் காலாண்டிற்கு உரித்தான உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய பெறுமதி சேர் வரித் தொகை ரூபா 1,684,492 தொகையான போதிலும் பொறுப்பாக ரூபா 2,641,252 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்கு உரித்தாக அனுப்பிவைக்கப்பட வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி ரூபா

116,980 தொகையான போதிலும் பொறுப்புகளாக ரூபா 301,843 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) சபைக்குரித்தான காணி வாடகைக்கிடப்படுவதற்கு உரித்தாக 2015 ஆம் ஆண்டிற்காக மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட கிடைக்கப்பெற்ற முன்னர் கிடைக்கப்பெற்ற வருமானப் பெறுமதியான ரூபா 55,103 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டின் போது சபைக்காகக் கொள்வனவு செய்யப்பட்ட 03 மோட்டார் சைக்கிள்களின் பெறுமதியான ரூபா 445,559 தொகை, ஊழியர் கடனாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக இவ் ஊழியர் கடன் வங்கிக் கணக்கிலிருந்து மீளாய்வாண்டின் போது செயற்பாட்டுச் செலவினத்திற்காகப் பொதுக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்த ரூபா 1,530,951 தொகை ஊழியர் கடன் கொடுப்பனவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஓ) 06 வருமான அறவீட்டுத் தலைப்புகளுக்கு உரித்தாக 2015 ஆம் ஆண்டிற்கு உரித்தான பெறுவனவுகள் ரூபா 122,170 நிலுவையான வேறு வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டின் போது களஞ்சிய முற்பணத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 32,136,267 தொகையான போதிலும் ரூபா 32,534,733 தொகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் கையிலுள்ள இருப்பின் பெறுமதி ரூபா 398,466 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(க) பிரதான பேரேட்டில் கையிலுள்ள காசுக் கணக்கில் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி ரூபா 1,006,303 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் இதில், ரூபா 944,264 தொகையான கையிலுள்ள காசு மீதி பொதுக் கணக்கிற்கு மாற்றப்பட்டதாக நாட்குறிப்பின் மூலம் அக் கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது. இத்தகைய நாட்குறிப்பைப் பதிகையிலான தேவைப்பாட்டிற்காக ஏற்றுக்கொள்ளத்தக்க எவ்வித தகவலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(கா) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கையிலுள்ள காசு ரூபா 123,234 ஆக உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் கையிலுள்ள காசுக் கணக்கின் மீதியாக ரூபா 717,947 தொகை நிதிநிலைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. ரூபா 594,713 தொகையான இவ் வேறுபாடு தொடர்பாக எவ்வித தெளிவூட்டலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(கி) மீளாய்வாண்டின் போது களஞ்சிய முற்பணத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,677,484 பெறுமதியான நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(கீ) மீளாய்வாண்டின் போது நூலகத்திற்காக அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 27,965 பெறுமதியான நூலகப் புத்தகப் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(கு) மீளாய்வாண்டின் இறுதியில் வங்கிக் கணக்குகளுக்கு உரித்தான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த மீதி காசேட்டில் உள்ளடக்கப்பட்ட மீதியுடன் ஒப்பிடுகையில் பின்வரும் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

| கணக்கு இல. | பெயர் | காசேட்டின் படியான மீதி | கணக்குக் கூற்றின் படியான மீதி | வேறுபாடு |
|---|---|---|---|---|
| ------------- | -------- | -------------- | -------------- | -------- |
| | | ரூபா | ரூபா | ரூபா |
| 1015721 | பொதுக் கணக்கு | 831,035 | 1,214,194 | 383,159 |
| 2161282 | அபிவிருத்திக் கணக்கு | 524,309 | 686,263 | 161,954 |
| 8153561 | திட்டக் கணக்கு | 1,415,168 | 1,418,865 | 3,697 |
| 73524973 | ஊழியர் கடன் கணக்கு | 1,773,108 | 1,744,725 | 28,383 |

(கூ) மீளாய்வாண்டிற்கு உரித்தான ரூபா 2,411,309 பெறுமதியான கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய செலவினத்திற்காக

கடன்கொடுத்தோரின் கீழ் ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(கெ) மீளாய்வாண்டின் போது 05 வங்கிக் கணக்குகளின் பொதுக் கணக்கிற்கு ரூபா 19,630,951 தொகையான உள்ளகக் கடன் கணக்கின் மூலம் மாற்றப்பட்டிருந்த போதிலும் உள்ளகக் கடன் கணக்கின் மூலம் ரூபா 12,600,000 மாத்திரமே பதிவு செய்யப்பட்டிருந்தது. மேலும், ஒவ்வொரு பதிவும் உள்ளகக் கணக்கின் மூலம் பொதுக் கணக்கிற்கு பதிவு செய்யப்பட்டிருந்தமையால் உள்ளகக் கடன் கணக்கு மீதி நிலவ முடியாத போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் அக் கணக்கில் ரூபா 32,103,872 தொகையான ஓர் மீதி காண்பிக்கப்பட்டிருந்தது.

(கே) மீளாய்வாண்டில் ஊழியர் கடன் வட்டிப் பெறுவனவுகளான ரூபா 739,765 தொகை உரிய அறவீட்டு மீதியின் கீழ் கணக்கீடு செய்யப்படுவதற்குப் பதிலாக ஊழியர் கடன் தவணைப்பணப் பெறுவனவாகக் கருதப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(கை) ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் மானிய இல. 2201 இன் கீழ் இரத்தினபுரி நுழைவு வீதி மற்றும் பல்நோக்கு நிர்மாணிப்புச் செயற்திட்டத்திற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 42 மில்லியன் தொகையான கடன் தொகைக்கு உரித்தாக மீளாய்வாண்டின் போது கடன் தவணைப் பணமான ரூபா 2,939,856 தொகையும் கடன் வட்டி ரூபா 3,535,138 ஆக ரூபா 6,474,994 செலுத்தப்பட்டிருந்தது. எனினும், குறித்த செலவின விடயத்தின் மூலம் செலுத்தப்பட்ட கடன் தவணைப் பணம் மற்றும் வட்டியாக முறையே ரூபா 2,229,237 மற்றும் ரூபா 1,667,803 ஆக ரூபா 3,897,040 மாத்திரமே கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் எஞ்சிய மீதியான ரூபா 2,577,954 தொகை கணக்கீடு செய்யப்பட்ட விதம் தொடர்பாக ஏற்றுக்கொள்ளத்தக்க எவ்வித தகவலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(கொ) ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் மானிய இல. 1632 இன் கீழ் இரத்தினபுரி கரையோர வீதி அபிவிருத்தி கடன் தொகையான ரூபா 12,656,450 இற்கு உரித்தாகச் சமர்ப்பிக்கப்பட்ட கடனை உறுதிப்படுத்தும் கூற்றின் படி, 2014 திசெம்பர் 31 ஆம் திகதி

செலுத்தப்பட வேண்டிய ரூபா 3,920,888 தொகையான வட்டித் தொகை திரண்ட செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(கோ) வருமானச் சேகரிப்பின் விசேட சேமிப்புக் கணக்கின் மூலம் மீளாய்வாண்டின் போது பொது நிர்வாகக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்த ரூபா 8,000,000 தொகை அக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

(கௌ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 33,387 கூட்டுத்தொகையான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி சபையால் அறவிடப்பட்டிருந்த அவ் வரிப் பெறுமதியிலிருந்து கழிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ங) மீளாய்வாண்டின் திசெம்பர் மாதம் ரூபா 11,250 பெறுமதியான பொருட்கள் சுகாதாரப் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும் அப் பெறுமதி மீளாய்வாண்டின் மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்டிராத 02 செலவின விடயங்களுக்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

(அ) 11 கணக்கு விடயங்களுக்கு உரித்தான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் படி, காண்பிக்கப்பட்ட மீதிகளின் படியும் பட்டோலைகளின் படியும் காண்பிக்கப்பட்ட மீதிகளுக்கிடையே ரூபா 6,791,488 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) செலவினப் பதிவேடு மற்றும் நிதிக்கூற்றுக்களை ஒப்பிடுகையில் 07 செலவின விடயங்களுக்கு உரித்தாக ரூபா 898,919 தொகையான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் மூலதனமான ரூபா 54,566,853 தொகை, நகர அபிவிருத்திப் பிரிவுச் செயற்திட்டக் கடன் கணக்கின் ரூபா 1,559,433 ஆகவும் கடன் மூலதனம் ரூபா 56,126,286 தொகையாகவும் நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அக் கடன் மீதிகள் தொடர்பான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நீண்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 6,511,802 பெறுமதியான வைப்புகள் தொடர்பான விபரம் உள்ளடக்கப்பட்ட பட்டோலை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) செலவினக் கடன்கொடுத்தோர் கணக்கின் ஆரம்ப மீதியான ரூபா 67,368,392 தொகையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக முன்னைய ஆண்டின் கடன்கொடுத்தோர் பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் செயற்பாட்டுச் செலவினத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 21,719,263 தொகையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் செயற்பாட்டுச் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 579,358 ஆகும்.

(ஆ) சபையால் முன்னைய ஆண்டுகளின் போது கணக்கீடு செய்யப்பட்டிராத வருமானச் செலவினக் கணக்கு விடயங்கள் மற்றும் கணக்குகளிற்கு மேற்கொள்ளப்பட்ட பல்வேறு சீராக்கங்கள் திரண்ட நிதியக் கணக்கின் மூலம் வருடாந்தம் சீராக்கம்

மேற்கொள்ளப்படுவது வழக்கமான இலட்சணமாகியிருந்தது. இதனால் அவ்வாண்டுகளின் நிதி விளைவுகள் தொடர்பாக நம்பிக்கை கொள்ள முடியாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் விளைவு தொடர்பாக இத்தகைய சீராக்கங்கள் எதிர்வரும் ஆண்டுகளின் போது மேற்கொள்ள இயலுமா என்பது குறித்து கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| **ஆண்டு** | **நிதி விளைவு** | **திரண்ட நிதியத்திற்கான சீராக்கம்** | | **சீராக்கத்தின் பின்னரான நிதி விளைவு** |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | | ரூபா |
| | | வரவு | செலவு | |
| 2013 | (33,715,528) | 14,585,117 | 5,729,096 | (42,571,549) |
| 2012 | 16,251,538 | 2,343,200 | 10,742 | 13,919,080 |
| 2011 | (4,089,542) | 1,817,490 | 1,907,722 | (20,361,310) |

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னயை ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் செயற்பாட்டுப் பற்றாக்குறை ரூபா 21,139,905 தொகையால் அதிகரித்திருந்ததுடன் இது 3649 சதவீத அதிகரிப்பென்பது அவதானிக்கப்பட்டது. இதற்கு முக்கியமாக கடந்த ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் வீதவரி, அனுமதிப்பத்திரக் கட்டணம், ஆணைச்சீட்டுக் கட்டணம், தண்டப்பணம், ஏனைய வருமானங்களில் முறையே 09 சதவீதம், 01 சதவீதம், 03 சதவீதம் மற்றும் 14 சதவீதத்தால் குறைவும் சம்பளம் மற்றும் படிப்பணம், போக்குவரத்துச் செலவினங்கள், வழங்கல்கள் மற்றும் உபகரணங்கள், மூலதனச் சொத்துக்கள் பழுதுபார்த்தல், போக்குவரத்து தொடர்பாடல் மற்றும் ஓய்வூதியச் சம்பளங்களின் முறையே 21 சதவீதம், 03 சதவீதம், 14 சதவீதம், 07 சதவீதம், 10 சதவீதம் மற்றும் 88 சதவீதத்தால் அதிகரிப்பும் தாக்கமளித்திருந்தன.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| வீதவரியும் வரியும் | 31,100 | 32,467 | 22,027 |
| வாடகை | 66,413 | 42,889 | 17,325 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,443 | 1,908 | - |
| ஏனைய வருமானம் | 76,441 | 50,192 | 1,019 |

#### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பீடு செய்கையில் வாடகை வருமானம், அனுமதிப்பத்திரக் கட்டணம், சேவைக்கான கட்டணம் மற்றும் ஆணைச்சீட்டுக் கட்டணம் மற்றும் தண்டப் பணம் மற்றும் ஏனைய வருமானங்களில் மதிப்பிடப்பட்ட வருமானத்தைப் பார்க்கிலும் சேகரிக்கப்பட்ட வருமானத்தில் முறையே 35 சதவீதம், 22 சதவீதம், 12 சதவீதம், 90 சதவீதம் மற்றும் 31 சதவீதக் குறைவு காணப்பட்டது.

#### 2.3.3 வாடகை

(அ) நகர சபைக்கு உரித்தான பொதுச் சந்தையில் 126 கடைகளிலிருந்து மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் ரூபா 3,713,816 தொகை

அறவிட வேண்டியிருந்ததுடன் இதில் 99 கடைகளிலிருந்து ரூபா 50,000 இலும் பார்க்கக் கூடுதலாக நிலுவையாகக் காணப்பட்ட கடைகளின் எண்ணிக்கை 23 ஆகக் காணப்பட்டதுடன் இதன் பெறுமதி ரூபா 1,615,837 அளவில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபைக்குரிய வக்ஷ்மி திரையரங்கிற்காக 2006 மே மாதம் முதல் 2014 திசெம்பர் 31 வரை பெறவேண்டிய வாடகை வருமானத் தொகையான ரூபா 551,000 அறவிடப்படுவதற்காக மீளாய்வாண்டின் போதும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 ஏனைய வருமானம்

இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் வண்டிகளின் தரிப்பிடக் கட்டணமான ரூபா 1,680,000 தொகையும் சத்திர வாடகையான ரூபா 6,914,015 தொகையும் நீண்ட காலமாக சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் அவ் வருமானத்தைப் பெற்றுக்கொள்ளப்படுவதற்கோ அல்லது உடன்படிக்கையின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதற்கோ இது வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 நீதிமன்ற தண்டப்பணம்

2014 செப்தெம்பர் மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப் பணத்தின் அளவை இனங்கண்டு கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாடற்ற கணக்குகள்

செயற்பாடின்றிக் காணப்படும் திட்டக் குழு வங்கிக் கணக்கின் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,415,167 தொகையான மீதி நிலவியது.

### 3.2 வெளிப்படையான மோசடியான கொடுக்கல்வாங்கல்கள்

சபை உத்தியோகத்தர்களால் பெறுவனவுச் சீட்டுக்கள் மாற்றப்படல், தொலைத்தல், பட்டோலைகளை மாற்றுதல் ஆகிய முறைகளின் மூலம்

விளிப்புடன் செயற்பட்டிருந்தமையால் ரூபா 2,657,041 தொகையான நிதி மோசடி நேர்ந்திருந்தமை நகர ஆணையாளரின் 2015 யூன் 23 ஆம் திகதிய அறிக்கையின் மூலம் கண்டறியப்பட்டது.

பெறுவனவுச் சீட்டுப் புத்தகத்தில் சகல பெறுவனவுச்சீட்டுக்களும் வியோகிக்கப்பட்டதை அடுத்து புதிதாக பெறுவனவுச் சீட்டுப் புத்தகம் ஒன்று விநியோகிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், மேற்குறித்த உத்தியோகத்தர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்த 35 பெறுவனவுச் சீட்டுப் புத்தகங்கள் மீள நிறுவகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 செயற்பாட்டுத் திறமையீனங்கள்**

-------------------------------------------

**(அ) சலுபிலிசல கட்டிடத்துடனான காணி**

------------------------------------------------

1929 ஆம் ஆண்டின் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவையியலாளரால் அளவிடப்பட்ட காணி தொடர்பான விபர அறிக்கை (Tenement List) யின் படி, சலுபிலிசல கட்டிடத்துடன் 23.5 பேர் அளவிலான காணி இருந்த போதிலும், 1969 ஆகஸ்ட் 23 ஆம் திகதி 38286 ஆம் இலக்க குத்தகையின் மூலம் 35 பேர்ச்சாகக் குறிப்பிடப்பட்ட மேற்குறித்த காணி கூட்டுறவு கைத்தொழில் சங்கத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டதன் பின்னர் 2008 இல் பொதுக் கூட்டத்தின் படி, 2009 திசெம்பர் 08 ஆம் திகதி மீள சபைக்கு ஒப்படைக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இரண்டு மாடிக் கட்டிடம் அன்றைய தின களப் பெறுமதி ரூபா 1,530,000 ஆக மதிப்பிடப்பட்டு இதில் ரூபா 765,000 தொகை முதலில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் குத்தகை வழங்கப்பட்டிருந்த மொத்தக் காணிக்காக நகர சபைக்கு ஒப்படைக்கப்பட்ட கட்டிடத்துடனான காணியின் அளவு 4.95 பேர்ச் என அதிகாரமளிக்கப்பட்ட அளவையியலாளரால் 2012 செப்தெம்பர் 23 ஆம் திகதி அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் எஞ்சிய காணியின் பகுதி சபைக்குப் பெற்றுக்கொள்ளப்படுவதற்காக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) சலுபிலிசல கட்டிடம் மற்றும் காணி குத்தகைக்கிடல்**

-----------------------------------------------

2013 செப்தெம்பர் 05 ஆம் திகதிய ரூபா 10,000,000 ஆன மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு 02 சந்தர்ப்பங்களின் போது ரூபா 169,008 தொகையான செலவில் 02 பத்திரிகை விளம்பரங்கள் வெளியிடப்பட்டு மேற்குறித்த குத்தகை வழங்கப்படுவதற்காக கேள்வி கோரப்பட்டிருந்தது.

i. ஒரு கேள்வியாளரால் ரூபா 10,002,000 பெறுமதியான கேள்வி விண்ணப்பம் நகர சபை ஊழியர்கள் இருவரின் சான்றுக் கையொப்பங்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் கேள்விச் சபை அங்கத்தவரின் கையொப்பம் இன்றி கேள்விச் சபைத் தீர்மானத்தின் மூலம் அக் கேள்வியாளருக்கு மேற்குறித்த கட்டிடம் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

ii. உடன்படிக்கை நிபந்தனைகளின் படி, உள்ள கட்டிடத்தை நவீனமயமாக்கி பயன்படுத்த வேண்டிய போதிலும் அந் நிபந்தனை மீறப்பட்டு தற்போதுள்ள கட்டிடம் 2014 மே 13 ஆம் திகதி உடைத்து அகற்றப்பட்டு அவ் இடத்திலேயே புதிய கட்டிடம் ஒன்றின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் இதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கட்டிடத் திட்டத்திற்கு, திட்டம் அங்கீகரிக்கப்படும் முறையான நடைமுறைகளிற்கு மாறாக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

iii. வீதி எல்லைக் கோடுகளைக் கருத்திற்கொள்ளாது காணியில் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படுவதற்கு அத்திவாரம் இடப்பட்டு கீழ் மாடி நிர்மாணிக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததாக 2015 சனவரி 13 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வில் கண்டறியப்பட்டது.

iv. மேற்குறித்த கட்டிடமும் காணியும் 2014 மே 13 ஆம் திகதி குத்தகைக்கு வழங்கப்பட்டதை அடுத்து அவ் இடத்தில் உள்ள அத்துமீறிய நிர்மாணிப்புகளை அகற்றுவதற்காகக் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், அக் கட்டளை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை எனவும், அவ் அத்துமீறிய நிர்மாணிப்புகள் தொடர்பில் சபையால் முறையான கவனம் செலுத்தப்பட்டிராமையால் ரூபா 30,000 தொகையான சட்டச்

செலவினம் சபைக்கு ஏற்க நேர்ந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) சட்டக் கட்டணங்கள்

------------------------------

சபையின் சகல சட்ட நடவடிக்கைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சட்டத்தரணி ஒருவருக்கு ரூபா 12,000 தொகையான மாதாந்தக் கட்டணம் செலுத்தப்படுவதற்கும் நீதிமன்றத்தில் தோன்றுவதற்காக நாளொன்றிற்கு ரூபா 300 படி செலுத்தப்படுவதற்கும் தீர்மானிக்கப்பட்டு சட்டத்தரணி ஒருவரின் சேவை பெறப்பட்டிருந்தது.

சட்டத்தரணிக்கு சட்ட நடவடிக்கைகளுக்காக ஓர் உடன்படிக்கையின் பிரகாரம் மாதாந்தம் ஓர் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருக்கையில் அவருக்கு சட்ட நடவடிக்கைகளில் தோன்றுவதற்காக 02 சந்தர்ப்பங்களின் போது ரூபா 35,000 படி ரூபா 70,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. உள்ளூராட்சித் திணைக்களத்தின் மூலம் குத்தகை உடன்படிக்கைக்காக குறித்த ஓர் விண்ணப்பம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கையில் சட்டத்தரணியால் தயாரிக்கப்பட்ட குத்தகை உடன்படிக்கைக்கான சேவைக் கட்டணமாக ரூபா 614,115 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பு நல்லாளுகையும்

------------------------------------------------------

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

--------------------------------------

36 செலவின விடயங்களுக்குரிய ரூபா 84,888,320 தொகையான மொத்த ஏற்பாடும் எவ்வித செயற்பாட்டிலும் ஈடுபடுத்தப்படாதிருந்தது.

### 4.2 பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

-------------------------------------------------------------------

2014 திசெம்பர் 31 வரையிலும் கணிப்பிடப்படக் கூடிய பெறுமதி ரூபா 343,641,728 தொகையான 34 கணக்காய்வு ஐயவினாக்களிற்கான பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்களின் பயன்பாடு